

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. கழக மறுசீரமைப்பு ஆலோசனைக் கூட்டத்தில் கூளகிரி, ஓசூர், வேப்பனப்பள்ளி ஆகிய இடங்களில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினருமான கிருஷ்ணசாமி, மாவட்ட செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ராணி ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் , மாநில இளைஞர் அணி துணை செயலாளர் வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன், மாவட்ட அவைத் தலைவர் யுவராஜ் ஆகியோர் உள்ளனர்.

கார்ப்பரேட் நிறுவனத்திற்கு மட்டும் ரூ.18,000 கோடிக்கு டெண்டர்!

முடிந்த ஒப்பந்தப் பணிகளுக்கு 80 சதவீதம் நிதி வழங்கவில்லை!

த.வெ.க. அரசு மீது ஒப்பந்ததாரர் சங்க மாநில பொதுச்செயலாளர் குற்றச்சாட்டு!

ஈரோடு, அக். 16 - *த.வெ.க. ஆட்சியில் புதிய பணிகளுக்கு கார்ப் ரேட் நிறுவனத்திற்கு மட் டும் ரூ.18 ஆயிரம் கோடிக்கு டெண்டர், ஏற் கனவே முடித்த பணிக ளுக்கு ஒப்பந்தாரர்க ளுக்கு 80 சதவீதம் வரை நிதி வழங்காமல் உள்ள தாக ஒப்பந்ததாரர்கள் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் குற் றம்சாட்டியுள்ளார்.*

ஈரோட்டில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை மற் றும் நீர்வளத்துறை ஒப்பந் ததாரர்கள் நலச்சங்கத் தின் கோவை மண்டல கூட்டம் நேற்று நடந்தது. இந்த கூட்டத்தில் பங் கேற்ற சங்கத்தின் மாநில பொதுசெயலாளர் கார் மேகன் நிருபர்க ளுக்கு பேட்டி அளித்தார். அப் போது, அவர் கூறிய தா வது:

தமிழ்நாட்டில் ஒப்பந்த தாரர்களுக்கு நிதிகளை விடுவிக்காததால் கடந்த 4 மாதங்களில் கடுமையான மனஉளைச்சல் ஏற்பட் டுள்ளது

கட்டுமான பொருட்க ளின் விலை 40 முதல் 70% உயர்ந்துள்ளது. ரூ.10 கோடிக்கு மேல் உள்ள பணிகளுக்கு ஆன்லைன் டெண்டரை பெரிய கார்ப்ரேட் நிறுவனங் களுக்கும், ரூ.10 லட்சம் முதல் ரூ.30 லட்சத்திற் கும் மேற்பட்ட பணி களை சிறிய ஒப்பந்ததா ரர்களுக்கு ஆப்லைன் டெண்டர் முறையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

புதிய அரசு அமைந்த தில் இருந்து ஏற்கனவே முடித்த ஒப்பந்த பணிக ளுக்கு தற்போது வரை 80 சதவீதம் வரை நிதி வழங் கவில்லை. கடந்த தி.மு.க. மற்றும் அதிமுக ஆட்சியி லும் 40 நாளுக்குள் தரக் கட்டுப்பாட்டு சான்றிதழ் உடன்தான் நிதியை வழங்கினர்.

இந்த ஆட்சியில் தற் போது, தரக்கட்டுப் பாட்டு சான்றிதழ் தாம தம் செய்து, நிதியை நிறுத்தி வைத்துள்ளனர்.

பொதுப்பணித்துறை அமைச்சரை 5 முறை பார்த்தும் கோரிக்கை அளித்தும் இதுவரை எவ் வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. டாடா, எல் அண்ட் டி போன்ற கம்பெனிகளுக்கு மட் டுமே டெண்டர் வழங்க வேண்டும் என தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர் நினைக்கிறார்.

புதிய அரசு அமைந்த உடன், எல் அண்ட் டி நிறுவனத்திற்கு மட்டும் ரூ.18 ஆயிரம் கோடிக்கு டெண்டர் வழங்கப்பட் டுள்ளது.

இதனால், 38 மாவட் டங்களில் இருக்கும் ஒப் பந்ததாரர்கள் பாதிக்கப் பட்டு, வெளியேதான் நின்று கொண்டிருக்கி றோம்.

த.வெ.க. அரசு கடந்த ஆட்சியாளர்கள், கட்சி நிதி வாங்கினார்கள் என மட்டும் என குற்றம் சாட்டி பேசி வருவதால், கடந்த 4 மாதமாக தமிழ் நாட்டில் வளர்ச்சி பணி கள் கடுமையாக பாதிக் கப்பட்டுள்ளது.

போர்க்கால அடிப்ப டையில் நடக்கும் பணிக ளுக்கு ஆப்லைன் (நேரடி) டெண்டர் வழங்க வேண் டும். புதிய ஆட்சி அமைந் ததில் இருந்து ஒப்பந்ததா ரர்களுக்கு எவ்வித ஒப்பந்த பணிகளும் வழங் காததால் நாங்கள் பூஜ்ஜி யத்தில் இருக்கிறோம்.

ஒப்பந்ததாரர்களை முறையாக அழைத்து கருத்துக்களையும், கோரிக்கைகளையும் கேட்டறிந்து, நிறை வேற்ற வேண்டும். கோரிக்கை ஏற்காவிட் டால் மாநிலம் தழுவிய உண்ணாவிரத போராட் டம் சென்னை அல்லது சேலத்தில் நடத்த உள் ளோம்.

மேலும், மாநில தழு வியவேலை நிறுத்த போராட்டமும் நடத்த உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

நாகர்கோவில்

52 வது வட்டக் கழக கூட்டம்!

குமரி, அக். 16– கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி, 52 வது வட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்ட மானது 52 வது வட்ட கழக செயலாளர் குணசேகரன் தலைமையில், நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதி செயலாளர் த.ஜீவா முன் னிலையில் 14.10.2026, புதன் கிழமை அன்று மாலை 6.00 மணியள வில் தெங்கம்புதூர், அஞ்சுகுடியிருப்பு பகுதியில் வைத்து நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செய லாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சிப் பணிகள் தொடர்பாக நிர்வாகி களுக்கு ஆலோ சனைகள் வழங்கினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் கன்னி யாகுமரி கிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் டி.தங்க துரை, கழக நிர்வாகிகள் ஆர்.சண்மு கராஜன், வில்சன் சாம், கே.ஜெயபா லன், பால்ராஜ், எஸ்.சந்திரசேகர், எஸ்.சுயம்பேசன், எஸ்.முருகன், எஸ். கணேசன், ஜஸ்டின், கே. ரமேஷ்கு மார், எஸ்.பாரத், தாஸ், சுரேந்திரன், பாரதி, சுடலைகண், தெளபிக் உட்பட பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA 2, BLC மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

தீர்மானம்: 1

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 2

கழக பணியினை தொய்வின்றி நடத்த கழகத் தலைவர் தளபதியாரின் அன்பு கட்டளையை ஏற்று நடக்கவும், மாவட்ட கழகம் அறிவிக்கும் பணி களை செவ்வனே நிறைவேற்றி கழ கம் மீண்டும் ஆட்சி அமைக்க அயராது பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம்: 3

கடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர் தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காளப் பெருமக்களுக் கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் நாகர்கோவில் மாநகர தெற்கு பகுதிக் கழகம் சார்பாக நன்றி தெரிவிக் கப்பட்டது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நாச்சியார்கோவில் ஆர்.பாண்டுரெங்கன்

அக்டோபர் 16 (2011)



தஞ்சை மாவட்டத்தில் கழகம் துவங்கியபோது கும்பகோணம் பகுதியில் நூற்றுக்கணக்கான இளைஞர்களை இயக்கத்தில் சேர்த்த பெருமைக்குரியவர்.

கே.கே.நீலமேகம், மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி, குடந்தை பத்மநாபன் ஆகியோருடன் இணைந்து கழகப் பணியாற்றியவர்.

குடந்தை, நாச்சியார்கோவில் பகுதிகளில் பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரை அழைத்து பல பொதுக்கூட்டங்களை நடத்தியவர்.

கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

மோடி வீக்கமும் - விஜய் வீக்கமும்!

பணவீக்கம் என்றால் என்ன?

விலைவாசி உயர்வையும், பணமதிப்புக் குறைவையும் விளக்கும் ஒரு சொல்.

உடலின் எப்பகுதியில் வீக்கம் ஏற்பட்டாலும், அது நோயின் அறிகுறி என்றுதானே நாம் அச்சப்படுகிறோம். மருத்துவரை அணுகிச் சிகிச்சை பெறுகிறோம்.

அன்றாட வாழ்வில் தொடர்ந்து விலைகள் உயரும்போது, இதுவும் பொருளாதார நோயின் அறிகுறி என நாம் உணர வேண்டும்.

எனவேதான் பணவீக்கம் என்ற சொல், விலைவாசி உயர்வு, பணமதிப்புச் சரிவு ஆகிய இரண்டையும் அடை யாளப்படுத்துகிறது.

இந்தப் பணவீக்கத் தாக்குதல் ஏழைகளையும், நடுத்தரப் பிரிவினரையும் வாட்டி வதைக்கிறது.

"ஒவ்வொரு பொருளின் விலையும் நேரத்திற்கு நேரம், இடத்திற்கு இடம் ஏறியும் இறங்கியும் வருகிறது.

அத்தகைய ஒவ்வொரு மாற்றத்தின்போதும், அந்தப் பொருளைப் பொறுத்தவரை பணத்தின் வாங்கும் திறனும் மாறுகிறது" என்று

பணவீக்கம் தொடர்பான விளக்கத்தை அளித்தார் பொருளாதார அறிஞர் ஆல்பிரட் மார்ஷல்.

(The price of every thing rises and falls from time to time and place to place; and with every such change the purchasing power of money changes so far as that thing goes. Alfred Marshall)

மார்ஷல் குறிப்பிட்ட இந்தக் கருத்து, இந்தியாவின் பொருளாதார நிலைகளில் இன்றும் கோலோச்சி வருகிறது.

ஒன்றிய அரசில் மோடி ஆட்சிக்கு வந்து 12 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

தமிழ்நாட்டில் விஜய் ஆட்சிக்கு வந்து 5 மாதங்கள் கடந்துவிட்டன.

2026 சட்டமன்றத் தேர்தலின் போது, விஜய் மேடைதோறும் உச்சக் குரலில் தி.மு.க. ஆட்சியை மட்டுமே குறைகூறி ஏசினார்.

கொள்கை எதிரி பா.ஜ.க. என்று அறிவித்து பரப்புரை செய்தார்.

ஆனால் இன்றோ, புதுதில்லியில் இளைஞர்களின் போராட்டத்தின் மீது காவல்துறையை ஏவிக் கடும் தாக்குதல்களை நடத்தி, மெட்ரோ இரயில் சேவையை மூடி, பல இலட்சம் மக்களை இன்னல்களுக்கு உள்ளாக்கிவிட்டு, தமிழ்நாட்டுக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடியை,

முதல்வர் விஜய் விமான நிலையத்துக்கே சென்று பூங்கொத்து வழங்கி, வணங்கி வரவேற்றார்.

ஆனால் தமிழ்நாட்டில் மெட்ரோ திட்டத்தை கொண்டு வந்ததே

கலைஞர் முதல்வராக இருந்த போது

தி.மு.க. ஆட்சியில் தான் என்பதை நல்லவர்களும் நாடும் மறந்து விடவில்லை.

சென்ற வாரம் பிரதமர் மோடியால்

தொடங்கப் பட்ட திட்டம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முதல்வராக இருந்த போது வடிவமைக்கப்பட்டு முடிக்கப்பட்ட திட்டம்.

முதல்வர் விஜய் இவ்விழாவில் முன்னாள் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுக்கு நன்றி கூறியிருக்க வேண்டும்.

நடிகரிடம் நாகரிகத்தை

எதிர்பார்க்க முடியாதல்லவா!

தேர்தல்தில்லுமுல்லுகள் வழியாகச் ஜனநாயகத்தை சிதைத்து சீரழிவு செய்து வரும் மோடிக்கு,

சங்கிகளே அதிர்ந்து போகும் அளவிற்கு சென்னையில் வரவேற்பு அளித்தார் விஜய்.

இந்தியாவில் நடந்தது என்ன?

நடப்பது என்ன?

மக்கள் நுகரும் எந்த முதன்மையான பொருளின் விலையும் ஏற்றம் கண்டதே ஒழிய, இறக்கம் காணவில்லையே!

வாழ்நிலையில் இறக்கத்தை மட்டுமே மக்கள் கண்டு வருகின்றனர்.

மோடி ஆட்சியில், பெட்ரோல் மீதான ஒன்றிய அரசின் தீர்வை வரி, 2014இல் லிட்டருக்கு Rs.9.48 என்ற அளவிலிருந்து 2020இல் Rs.32.98 என மூன்று மடங்குக்கும் மேலாக உயர்த்தப்பட்டது.

மார்ச் 2026இல் தீர்வை வரியை லிட்டருக்கு Rs.10 குறைத்ததாக ஒன்றிய அரசு அறிவித்தபோதும், அதன் பயன் நுகர்வோருக்குச் சென்று சேரவில்லை; சில்லறை விலை ஒரு பைசா கூடக் குறையவில்லை.

2026 மே 15 முதல் 25 வரையிலான பத்தே நாட்களில், ஒன்றிய அரசின் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் நான்கு முறை பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தின.

மே 15 அன்று ஒரே நாளில் லிட்டருக்கு Rs.3 உயர்த்தப்பட்டது; அதனைத் தொடர்ந்து மே 19, 23, 25 ஆகிய நாட்களிலும் விலை ஏற்றப்பட்டது.

இதனால் தில்லியில் பெட்ரோல் விலை Rs.94.74இலிருந்து Rs.102.12 ஆக, லிட்டருக்கு Rs.7.38 உயர்ந்தது.

சென்னையில் இன்று பெட்ரோல் லிட்டருக்கு Rs.107.76, டீசல் Rs.99.55 என விற்கப்படுகிறது;

பத்து நாட்களில் லிட்டருக்குச் சுமார் Rs.7 உயர்வு.

எரிபொருள் விலை உயர்வு சரக்குப் போக்குவரத்துச் செலவை உயர்த்தி, அரிசி முதல் காய்கறி வரை அன்றாடப் பொருட்களின் விலையையும் உயர்த்து கிறது.

உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்த காலத்திலும், அதன் பயன் மக்களுக்குச் சென்று சேரவில்லை.

திராவிட மாடல் ஆட்சியில், 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13 அன்று அன்றைய முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், பெட்ரோல் மீதான மாநில விற்பனை வரியை லிட்டருக்கு Rs.3 குறைத்து தமிழ்நாட்டில் விலை உயர்வைக் கட்டுப்படுத்தினார்.

எரிபொருள் விலை உயர்வு, ஒன்றிய அரசின்

வரிச்சுமை ஏற்றத்தால் ஏற்பட்ட விளைவு!

சந்தைப் பொருளாதாரத்திற்குச் சப்பைக்கட்டு கட்டும் அமெரிக்கப் பொருளாதாரப் பேராசிரியர் மில்டன் ஃப்ரீட்மேன், "பணவீக்கம் என்பது சட்டத்தின் வழியே அறிவிக்கப்படாத வரிச்சுமை" (Inflation is taxation without legislation) என்றார்.

ஆனால், வரிச்சுமை வழியாகப் பணவீக்கத்தை வானுயர உயர்த்திய பெருமை மோடிக்கே உரியது.

தி.மு.க. ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்ட மெட்ரோ இரயிலில் பிரதமர் மோடியோடு பயணம் செய்த தமிழ்நாட்டின் முதல்வர் விஜய், விலைவாசி உயர்வுக்கு அடிப்படைக் காரணமாக உள்ள பெட்ரோலியப் பொருட்கள் மீதான ஒன்றிய அரசின் தீர்வை வரியைக் குறைக்கக் கோரிக்கை வைத்திருக்கலாம்.



பேராசிரியர்
மு.நாகநாதன்

இரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய்யைச் சுத்திகரித்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அம்பானி பெரும் லாபம் ஈட்டுவதற்குத் துணைபோகும் பிரதமரே, எங்கள் கட்சியின் முன்னாள் கொள்கை எதிரியே, இந்நாள் கொள்கை வழி காட்டியே, மக்களுக்காக இந்த வரிக் குறைப்பை நீங்கள் செய்யக்கூடாதா என்று பணி வோடு கேட்டிருக்கலாமே!

எரிபொருள் விலை உயர்வு, போக்குவரத்து உட்படப் பல பொருளாதாரக் காரணிகளின் விலை ஏற்றத்திற்குப் பல்வேறு நிலைகளில் வழி வகுக்கிறது.

பணவீக்கத்திற்குப் பல பரிமாணங்கள் உண்டு:

தவழ்ந்து செல்லும் பணவீக்கம் (Creeping inflation)

நடை வேகத்தில் செல்லும் பணவீக்கம் (Walking inflation)

ஓடும் பணவீக்கம் (Running inflation)

பாய்ந்து செல்லும் பணவீக்கம் (Galloping inflation)

தேவை ஆர்வப் பெருக்கத்தால் ஏற்படும் தேவை இழுப்புப் பணவீக்கம் (Demand pull inflation)

செலவு உந்து பணவீக்கம் (Cost push inflation)

எந்தப் பெயரிட்டு அழைத்தாலும், மேற் குறிப்பிட்ட பல்வகை பணவீக்கம் இன்று இந்திய மக்களின் வாழ்வாதாரத்தைச் சீரழித்து வருகிறது.

தமிழ்நாட்டில், மற்ற மாநிலங்களில் காணப்படாத அளவிற்கு விலை உயர்வு ஏற்பட்டு வருகிறது.

அரிசி, சர்க்கரை, பால்,எண்ணெய், பருப்பு வகைகள், காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

இத்தகைய விலை உயர்வை

இங்கிலாந்து சந்தித்த போது!

சந்தைப் பொருளாதாரத்தைப் போற்றும் நாடுகளுக்கு, பொருளாதார அறிஞர் கெயின்ஸ் ஓர் எச்சரிக்கை விடுத்தார்.

"முதலாளித்துவ அமைப்பை அழிப்பதற்குச் சிறந்த வழி, நாணயத்தின் மதிப்பைச் சீரழிப்பதே" என்று புரட்சியாளர் லெனின் கூறியதாகச் சொல்லப்படும் கருத்து சரியானதே என அவர் ஒப்புக்கொண்டார்.

மேலும் கெயின்ஸ், "தொடர்ந்த பணவீக்கத்தின் மூலம், அரசுகள் குடிமக்களின் செல்வத்தில் கணிசமான பகுதியை, இரகசியமாகவும் யாரும் அறியாமலும் கைப்பற்ற முடியும்" என்றும் குறிப்பிட்டார்.

இந்த விளக்கங்களையும் தாண்டி, பெருகி வரும் வருமான ஏற்றத்தாழ்வு, வேலையின்மை, வறுமை, போதிய ஊட்டச்சத்து இல்லாமல் பெரும்பாலான மக்கள் படும் துயரம் ஆகியவற்றைக் கணக்கிட்டால், பணவீக்கமும் விலைவாசி உயர்வும் மக்கள் மீது பல்முனைத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன என்பதைக் காணலாம்.

இன்றைய மோடி அரசும், விஜய் அரசும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தத் தவறியது மட்டுமல்ல, ரீல்ஸ் போட்டு மக்களை ஏமாற்றலாம் என்று நாடகம் ஆடுகின்றன.

மக்களை நீண்ட நாள் ஏமாற்ற முடியாது என்பதற்கு, ஜந்தர் மந்தரில் நடைபெறும் இளைஞர்களின் போராட்டம் எச்சரிக்கை மணியை ஓங்கி ஒலித்து வருகிறது.